


## *திங்கள் அமர்வு—25 அழைப்பு*

நிலம்: தவத்திரு.சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி வளாகம், பேரூர். கோவை10.
பொழுது: தி.பி.**2050** மடங்கல் (ஆவணி) கரு ஞாயிறு (**01-09-2019**)
காலை **9.30** மணி முதல் பிற்பகல் 1.3 o மணி வரை

*நிகழ்முறை*

**தமிழ்த்தாய்வாழ்த்து:** சேர்ந்திசைத்தல்

**வரவேற்புரை**: புலவர் **ப.வேலவன்** (செயலர் தொல்காப்பியர் தமிழ்ச்சங்கமம்) அவர்கள்

**அருளுரை:** தவப்பெருந்திரு **சாந்தலிங்க மருதாசலஅடிகளார்**, பேரூராதீனம் அவர்கள்

**தலைமைஉரை:** தமிழ்த்திரு **ஆசு கவி ப.ஆறுமுகம்** அவர்கள்
(நிறுவனர் ஜனா தொழிற் பட்டறை)

**வாழ்த்துரை:** **கவிவளர் உழவன் வெற்றி வேல் ஐயா** (வைகறைக் கவிமன்றம்) அவர்கள்

**வாழ்த்தப்படுவோர்: திருமிகு பாலாசி** (மேலாளர் சிட்டியூனியன் வங்கி பேரூர்க்கிளை)அவர்கள்

**சிறப்புரை:** தமிழ்த்திரு **முனைவர் கா.நாகராசன்** அவர்கள்
(தமிழ்த்துறைத் தலைவர், த.சா.க.அ.தமிழ்க்கல்லூரி பேரூர்)

**தலைப்பு:** தொல்காப்பியம்- செய்யுளியல் கூறுகள்

**தொல்காப்பியப்பயிலரங்கம்:** தொல்காப்பியச் செம்மல் **புலவர் ஆ.காளியப்பன்** அவர்கள்
**(**தலைவர் தொல்காப்பியர் தமிழ்ச்சங்கமம்)

**தலைப்பு:** **தும்பைத்திணை**

**செப்பிடுவித்தை & இலக்கியப்புதிர்**: கலைமாமணி தமிழ்ச்செம்மல் **மு.பெ.இராமலிங்கம்** அவர்கள்

**வந்தோர்க்கு வாய்ப்பு:** அனைவரும் பங்கு பெறலாம்(பொழிவு,கவிதை,பாடல்,உரிய நேரத்தில் வந்தால்)

**இணைப்புரை:** திருமதி **கா.இந்துமதி** க.மு.ச.இ (வழக்கறிஞர்,கோவை) அவர்கள்.

**நன்றியுரை:** கவிச்சுடர் **கா.உமாபதி,**எம்.ஏ.,பி.எட்.,எம்.ஃபில். (பொருளாளர் தொல்காப்பியர் தமிழ்ச்சங்கமம்) அவர்கள்

**நிறைவுப்பண்:** **இன்றமிழ்த்தேன் பருக. . . !** **எல்லோரும் வருக. . . !**

வேண்டுந்தங்களன்புடன்
தொல்காப்பியர் தமிழ்ச்சங்கமம் குழுவினர்
தொடர்புக்கு 8610684232/ 6380259784/ 9942411498

## தொல்காப்பிய முத்து: திருமண நிகழ்வு ஏற்படக் காரணம்

**பொய்யும் வழுவும் தோன்றி பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப** (தொல். பொருள். கற்பு **1091**)

ஊழ் வினையால் ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காதல் கொண்டனர். கண்ணால் பேசியவர், கரம் கோத்தனர். களிப்பும் எய்தினர். இவ்வாறு தனிமையில் இனிமை கண்ட இருவரும், களவினை நீக்கி பலரும் அறியக் குடும்ப வாழ்க்கையை வாழத் தொடங்கிய நிலையே கற்பு எனப்பட்டது. அவ்வாறு தம் வாழ்க்கைத் துணைவரைத் தாமே தேர்ந்தெடுத்து வாழத் தொடங்கிய காலத்தில், ஒருசில தலைவர் இவளை நான் காதலிக்கவில்லை எனப் பொய் பேசியும் (பொய் என்பது செய்தலை மறைத்தல்), ஒருசிலர் பிறர் அறிய வாழ்க்கை வாழும் போதே அவளைக் கைவிட்டும் வந்தனர். (வழு என்பது செய்வதில் கடைசி வரை உறுதியாக நில்லாது இடையில் தவறிவிடுதல்) இவ்வாறு பொய்யும் வழுவும் தோன்றி ஏமாற்றுத்தனங்கள் நிகழ்ந்தன. வண்டு வந்து தேன் குடித்தால் மலருக்கத்தான் தண்டனை என்பதாலும் மலருக்கு மலர்தாவும் வண்டாகச் சில ஆடவர் மாறியதாலும் ஏமாற்றுத் தனங்கள் மலிந்தன. ஆனால் மலரோ காய்களைத் தாங்க வேண்டியதாயிற்று. தந்தை மகற்காற்றும் நன்றிகளும் இருந்ததால் களவொழுக்கம் ஒழுகி இல்லறம் நடத்தத் தொடங்குவோர் இனிப் பலர் முன்னிலையில் பெற்றோர் உடன்பட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாட்டை ஏற்படுத்தினர். இதனையே தொல்காப்பியர் “கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள்வது” என்றார். இக்கட்டுப்பாட்டின் படியே எல்லாத் தமிழர்களும் ஒழுகி வந்தனர். இதுவே திருமண நிகழ்வுகளுக்குக் காரணம் ஆயிற்று. இதில் ஐயர் என்பதை இக்காலத்தில் உள்ள பார்பனர்களாகக் கொண்டதால்தான் இந்நூற்பா இடைச் செருகல் எனக்கொண்டனர் சிலர். ஐயன் என்றால் தன் தந்தையின் தந்தை எனக் கொங்கு நாட்டில் குறிப்பர். ஐயர் என்பதை மேன்மை பொருந்திய குலப்பெரியோர், ஆசிரியர், வயதில் மூத்தோர் என எடுத்துக் கொள்வதே மிகவும் சிறப்புடையதாகும். இவ்வாறு சமுதாயச் சான்றோர்களால் நடத்தி வைக்கப்பட்ட திருமண வாழ்க்கையே கற்பு. இதனையே இயல்பினால் இல்வாழ்வான் என்றார் வள்ளுவரும்.